தாம்பரம் மாநகராட்சி மண்டலம்:4, 53,வது வார்டில் உள்ள டி.டி.கே நகர் சர்வீஸ் சாலையில் கட்டன் கால்வாய் அமைக்கும் பணி நடைபெற்று வருவதை கழக பொருளாளர் டி.ஆர்,பாலு எம்.பி. நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டு பணிகளை விரைந்து முடிக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார் உடன் தாம்பரம் மாநகராட்சி ஆணையர் சீ.பாலச்சந்தர் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் இருந்தனர்.



வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் நேற்று (25.10.2025) சென்னை எழிலகத்தில் உள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் வடகிழக்குப் பருவமழை காரணமாக மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாடு நடவடிக்கைகள் மற்றும் ஆயத்த நிலைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது வருவாய் நிருவாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் எம்.சாய்குமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி பெ. அமுதா, பேரிடர் மேலாண்மைத் துறை ஆணையர் திருமதி சிஜி தாமஸ் வைத்தியன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு

“அன்னம் தரும் அமுதகரம்” 248 வது நாள்!

திரு.வி.க.நகர் தெற்குப் பகுதியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்

சென்னை, அக். 26- சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கழக தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, வெவ்வேறு இடங்களில் அன்னம் தரும் அமுதகரங்கள் சிறப்புமிகு திட்டத்தின் 248 வது நாள் திரு.வி.க நகர் தெற்கு பகுதியில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு வழிகாட்டுதல் படி உணவு வழங்கப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 248 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (25.10.2025), திரு.வி.க நகர் தெற்கு பகுதி: 1) வட்டம் 75, செங்கல்வராயன் தெரு, ராமலிங்கபுரம், 2) வட்டம் 75 அ, சின்னபாபு தெரு, நம்மாழ்வர்பேட்டை, சென்னை ஆகிய பகுதிகளில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்.

தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமா ட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழி ஏற்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மேயர் பிரியா ராஜன், ப.தாயகம் கவி எம்.எல்.ஏ, எம்.சாமிகண்ணு, இசட்.ஆசாத், பி.ஜெ.துளசிங்கம், இரா.வீரமணி, நா. துலுக்காணம், எம்.பெரோஸ் கான், கா.ராஜ்முகமது, எல். ரமணி, எஸ்.தமிழ்செல்வி, எஸ்.சசிகுமார், பா.பி.தாஸ், டி.சுரேஷ்குமார் (எ) பொல்லு சுரேஷ், எம்.தமிம், எஸ்.வெங்கடேசன், வி.க. வெங்கடேசன், மீனவரணி பகுதி அமைப்பாளர் தே.ரஞ்சித்குமார், வர்த்தகர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் எஸ்.சதீஷ்குமார். இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: சொ. வேலு, S.முரளி, பெரம்பூர். R. ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம. அசோக்குமார், L.சம்பத்குமார், க. பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

சென்னையில் மழை பாதிப்புகளை சரிசெய்ய

22 ஆயிரம் பேர் பணியில் ஈடுபட்டுள்ளனர்!

சென்னை மாநகராட்சி அறிவிப்பு!

சென்னை, அக்.26- சென்னையில் பருவமழை பாதிப்புகளை சரிசெய்ய 22,000 பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று சென்னை மாநகராட்சி தெரிவித்துள்ளது. மாநகராட்சி அலுவலர்கள், பொறியாளர்கள், பணியாளர்கள், தூய்மை பணியாளர்கள் உள்பட 22,000 பேர் களத்தில் உள்ளனர். பல்வேறு திறன் கொண்ட 1,436 மோட்டார் பம்புகள், 500 டிராக்டர்கள், 478 வாகனங்கள் மற்றும் எந்திரங்கள் தயார் நிலையில் உள்ளது.

வடகிழக்கு பருவமழை தொடங்கி, தமிழ்நாடு முழுவதிலும் பரவலாக மழை பெய்து வருகிறது. இந்த பருவமழை காரணமாக மக்கள் வாழும் பள்ளமான பகுதிகளில் தேங்கும் மழைநீரால் பொதுமக்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரடியாகவும் காணொலி காட்சி வாயிலாகவும் அரசின் உயர் அதிகாரிகள் மற்றும் மாவட்ட ஆட்சி தலைவர்கள், காவல்துறை அதிகாரிகள் ஆகியோருடன் ஆய்வுக் கூட்டங்களை நடத்தி தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தி வருகிறார். அந்தவகையில் முதல்வர், துணை முதல்வர் மற்றும் அமைச்சர்கள் மழைநீர் சூழும் இடங்களை பார்வையிட்டு அதிகாரிகளுக்கு அறிவுரைகளை வழங்கி வருகின்றனர்.

வடகிழக்கு பருவமழை தொடங்கி கடந்த 17ம் தேதி 179.80 மி.மீ. மழை பெய்துள்ளது. அதேபோல், 23ம் தேதி சராசரியாக 17.94 மி.மீ. மழை பெய்துள்ளது. அதிகபட்சமாக மேடவாக்கத்தில் 93.30 மி.மீ. மழை பெய்துள்ளது. மழைநீர் சூழ்ந்து பாதிக்கப்படும் பகுதிகளில் உள்ள மக்களுக்கு தேவையான உதவிகளை அளித்திடும் நோக்கில் வெள்ள நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சென்னையை பொறுத்த வரை மாநகராட்சி சார்பில் 215 இடங்களில் நிவாரண மையங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. இந்த மையங்களில் உணவு சுகாதார வசதி, குடிநீர் வசதி முதலியவை செய்யப்பட்டுள்ளன. நிவாரண மையங்களுக்கு உணவு வழங்க ஏதுவாக 106 சமையல் கூடங்கள் அமைக்கப்பட்டு தயார்நிலையில் உள்ளன.

தாழ்வான பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு கடந்த 22 மற்றும் 23ம் தேதி 1,48,450 பேருக்கு காலை உணவும், 2,23,950 பேருக்கு மதிய உணவும் 28,000 பேருக்கு இரவு உணவும் என மொத்தம் 4 லட்சத்து 400 பேருக்கு உணவு வழங்கப்பட்டுள்ளது. மழைநீர் தேங்கும் இடங்களில் மழைநீரை வெளியேற்றும் வகையில் பல்வேறு திறன் கொண்ட 1,436 மோட்டார் பம்புகள் தயார் நிலையில் உள்ளன.

150 எண்ணிக்கையில் 100 குதிரை திறன் கொண்ட மோட்டார் பம்புகள் தயார் நிலையில் உள்ளன. டிராக்டர் மேல் 500 மோட்டார் பம்புகள் பொருத்தப்பட்டு தயார் நிலையில் உள்ளன. இதன் மூலம் மழைநீர் தேங்கும் இடங்களில் மழைநீர் அகற்றும் பணிகள் நடந்து வருகிறது.

சென்னை மாநகராட்சி தொடர்பான புகார்களை 1913 என்ற எண்ணிற்கும், சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றல் தொடர்பான புகார்களை 1916 என்ற உதவி எண்ணிற்கும் 24 மணி நேரமும் கட்டணமில்லாமல் தெரிவித்து தேவையான உதவிகளைப் பெறும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வடகிழக்கு பருவமழையால் பாதிப்புகளை அகற்றி உரிய நடவடிக்கைகளை எடுக்க சென்னை மாநகராட்சியின் அலுவலர்கள், பொறியாளர்கள், பணியாளர்கள், தூய்மைப் பணியாளர்கள் உள்ளிட்ட 22 ஆயிரம் பேரும் சென்னை குடிநீர் வாரியம் 2,149 களப்பணியாளர்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். சென்னை மாநகரில் பொதுமக்களுக்கு 454 குடிநீர் வாகனங்கள் மூலம் 23ம் தேதி வரை 3181 நடைகள் வாயிலாக தடையில்லாமல் குடிநீர் வழங்குவதற்காக குடிநீர் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தருமபுரி மேற்கு மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி அருகே சாலூர் கிராமத்தில் மழையால் தரை பாலம் அடித்து செல்லப்பட்டது.தகவல் அறிந்து தர்மபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் பி.பழனியப்பன் சேதமடைந்த தரை பாலத்தை பார்வையிட்டு,கிராமத்து பொதுமக்களிடம் சேதம் குறித்து கேட்டறிந்தார்.மேலும் கிராமத்து பொதுமக்கள் பாலம் கட்டி கொடுக்க வேண்டும் என்று வைத்த கோரிக்கையை மீது விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி அளித்தார்.உடன் ஒன்றிய கழகச் செயலாளர் சி. முத்துக்குமார்,இளைஞர் அணி அமைப்பாளர் சர்மா,துணை அமைப்பாளர் புகழேந்தி; கோகுல், அருள்மாது திருப்பதி,மணிகண்டன் நிஷாந்த்,பன்னீர்செல்வம், ஆறுமுகம்,முத்து,மணிவண்ணன் முருகன் உள்ளிட்ட திமுகவினர் உள்ளனர்.

திருவாரூர் மாவட்டத்தில் மழையால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்கள்!

அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நேரில் ஆய்வு!

திருவாரூர், அக். 26 - திருவாரூர் மாவட்டத்தில், வடகிழக்கு பருவமழையால் பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களை வேளாண்மை, உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மாவட்டச் செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ. , தாட்கோ தலைவர் என். இளையராஜா, வை.செல்வராஜ் எம்.பி., கே.மாரிமுத்து எம்.எல்.ஏ.,மாவட்ட ஆட்சித்தலைவர் மோகனச்சந்திரன், நகர செயலாளர் வாரை. பிரகாஷ், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் வ.தட்சிணாமூர்த்தி, வேளாண்மை இயக்குனர் பா.முருகேஷ், ஆகியோர் உடனிருந்தனர்.

பின்னர் வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது...

இன்றைய தினம், வடகிழக்கு பருவமழையால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்களை பார்வையிடப்பட்டது. சில வயல் பகுதிகள் மழைநீரால் சூழப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளை கண்டறியும் வகையில் கணக்கெடுக்கும் பணியினை விரைவுப்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நெல் உற்பத்தியை பொறுத்த வரையில் கடந்தாண்டை விட மூன்று மடங்கு அதிகமாக உள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மேட்டூர் அணை குறிப்பிட்ட நேரத்தில் திறந்து வைக்கப்பட்டதாலும்;, தமிழ்நாடு முழுவதும் 276 கோடி குறுவை தொகுப்பு வழங்கப்பட்டுள்ளதாலும், நான்கு ஆண்டு காலத்தில் கூடுதலாக 1 லட்சத்து 84 ஆயிரம் இலவச மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாலும் விவசாயம் பெரும் வளர்ச்சியடைந்து அதிகளவில் நெல் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. மேலும், விவசாயத்தில் முதன்மை மாநிலமாக தமிழ்நாடு விளங்கி வருகிறது.

வானிலை நிலவரத்தை கருத்தில் கொண்டு, இந்த அரசு பொறுப்பேற்றவுடன் வழக்கமாக அக்டோபர் மாதத்தில் மேற்கொள்ளப்படும் நெல கொள்முதல் 2022ம் ஆண்டு முதல் செப்டம்பர் மாதத்திலேயே மேற்கொள்ளப்படுகிறது. மேலும், கடந்த 3 ஆண்டுகளில் செப்டம்பர் மாதம் துவங்கிய கொள்முதலில் இதுவரை நடப்பாண்டில் அதிகளவாக 9.67 லட்சம் மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் தமிழகம் முழுவதும் இதுவரை 808 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் கூடுதலாக திறக்கப்பட்டு மொத்தமாக 1819 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் செயல்பட்டு வருவதுடன், நாள்தோறும் கொள்முதல் நேரம் மாலை 6 மணி வரை இருந்த நிலையில் இரவு 8 மணி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

மேலும், தமிழக அரசு ரூ.1959 கோடி ஊக்கத் தொகையாக விவசாயிகளுக்கு வழங்கியுள்ளது. நெல் கூடுதலாக விளைந்த காரணத்தினால், கொள்முதல் பணிகள் துரிதப்படுத்தப்பட்டு நெல் முறையாக பாதுகாக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு முதல மைச்சர் அவர்களின் தலைமையிலான அரசின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு சி மற்றும் டி வாய்க்கால் தூர்வாரும் பணி 8 ஆயிரத்து 371 கி.மீ., அளவிற்கு தூர்வாரப்பட்டு ள்ளது. மேலும், 2 ஆயிரத்து 355 கி.மீ மட்டுமே தூர்வாரப்படவுள்ளது.

தற்போது தனியார் நிறுவனங்கள் நெல் கொள்முதல் செய்வதில்லை. அரசாங்கமே நேரடியாக நெல்லினை கொள்முதல் செய்துவருகிறது. முதலமைச்சர் அவர்கள் நாள் ஒன்றுக்கு கொள்முதல் 800 மூட்டையிலிருந்து 1000 மூட்டையாக உயர்த்தி உத்தரவு பிறப்பித்துள்ளார். அதோடு விவசாயிகளின் கோரிக்கையினையேற்று ஒரு ஏக்கருக்கு 60 மூட்டையிலிருந்து 70 மூட்டையாக உயர்த்தி அரசாணை வெளியிடப் பட்டிருக்கிறது என வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் தெரிவித்தார்.

அமைச்சரின் இந்த ஆய்வின்போது அரசு அதிகாரிகள், விவசாய சங்க பிரதிநிதிகள், பொதுமக்கள் உடன் பங்கேற்றனர்.

தொடர்ந்து திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ரயில் நிலையத்தில் இரயில் மூலம் கொள்முதல் செய்யப்பட்ட நெல் வெளிமாவட்டங்களுக்கு அரவைக்கு அனுப்பி வைக்கப்பட்டுவருவதையும், வலங்கைமான் வட்டம், நார்த்தங்குடி நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் மோகனச்சந்திரன் செய்தியாளர்களுடன் நேரில் சென்று பார்வையிட்டார்கள்.

அப்போது “திருவாரூர் மாவட்டத்தில், குறுவை அறுவடை 80 சதவீதம் முடிந்து விட்டது. ஏறக்குறைய 1 லட்சத்து 96 ஆயிரம் மெ.டன் நெல் கொள்முதல்செய்யப்பட்டுள்ளது. கொள்முதல் செய்யப்பட்ட நெல் வெளி மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கும் பணி நடைபெற்று வருகிறது. நேற்று முன் தினம் 10,000 மெ.டன் நெல் ஐந்து இரயில் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இன்றைய தினம் மன்னார்குடி பகுதியில், நீடாமங்கலம், மன்னார்குடி, திருத்துறைப் பூண்டி ஆகிய 3 இரயில் பகுதியிலிருந்து 6 ஆயிரம் மெ.டன் நெல் அனுப்பி வைக்கப்பட்டு வருகிறது.

மேலும், 154 லாரிகளில் ஏறத்தாழ 100 லாரி வந்துள்ளது. 50 லாரி வந்துகொண்டுள்ளது. நாளையும் நான்கு ரயில் மூலம் அனுப்ப அனுமதி பெறப்பட்டு, இதன்மூலம் 8000 மெ.டன் நெல் அனுப்பபடும். மேலும், நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யப்பட்ட நெல் முறையாக பாதுகாக்கப்பட்டு, போர்கால அடிப்படையில் நாள் ஒன்றுக்கு 8000 முதல் 10000 மெ.டன் வரை இயக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் மோகனச்சந்திரன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

மாவட்ட ஆட்சியரின் இந்த ஆய்வில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக முதுநிலை மண்டல மேலாளர் சரவணன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மீ.செல்வகுமார் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பங்கேற்றனர்.

தஞ்சை தெற்கு மாவட்டம்

பட்டுக்கோட்டை தெற்கு ஒன்றியப் பொறுப்பாளர்-பொறுப்புக்குழு உறுப்பினர்கள் நியமனம்!

தலைமைக் கழக அறிவிப்பு

தஞ்சை தெற்கு மாவட்டம், பட்டுக்கோட்டை தெற்கு ஒன்றியச் செயலாளர் சத்திய விஜயன் அவர்களுக்கு பதிலாக, ஒன்றியக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற பட்டுக்கோட்டை தெற்கு ஒன்றியக் கழக பொறுப்பாளர் பொறுப்புக் குழு உறுப்பினர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

பொறுப்பாளர் : **ரா. மகாலிங்கம்**
பள்ளிகொண்டான்.பட்டுக்கோட்டை,
தஞ்சாவூர் மாவட்டம்.

பொறுப்புக்குழு உறுப்பினர்கள்:
1. ஆ. யாக்கோபு, பட்டுக்கோட்டை,
2. த. பாண்டியன், பட்டுக்கோட்டை
3. எஸ். சுப்புமாறன், பட்டுக்கோட்டை.
4. என். சுரேஷ், பட்டுக்கோட்டை.
5. த. ராமச்சந்திரன், பட்டுக்கோட்டை
6. ம. அமிர்தம், பட்டுக்கோட்டை
7. ப.இராமமூர்த்தி, பட்டுக்கோட்டை
8. நா. பாலகிருஷ்ணன், பட்டுக்கோட்டை

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 25-10-2025.

துரைமுருகன்
பொதுச்செயலாளர்
தி.மு.க.

திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி காட்டுப்பாக்கம் நசரத்பேட்டை , யமுனா நகர் பகுதியில் தேங்கியுள்ள மழை நீர் அகற்றும் பணிகள் மற்றும் ஆவடி தொகுதி திருநின்றவூர் நகராட்சிஈசா ஏரியில் 9.3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மழை நீர் வடிகால்வாய்அமைக்கும் பணிகளையும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ்தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆய்வு மேற்கொண்டு பார்வையிட்டார். உடன் திருவள்ளூர் மாவட்ட கண்காணிப்பு கே.பி.கார்த்திகேயன் , மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ மாநகராட்சி ஆணையர் ரா.சரண்யா, நகராட்சி தலைவர் உஷாராணி ரவி, ஒன்றிய நகர செயலாளர்கள் தி.வை.இரவி, ப.ச.கமலேஷ், அரசு அலுவலர்கள் சு.சுரேஷ், வை.ஜெயக்குமார், செயற்பொறியாளர் ராஜவேல் மற்றும் பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.